1972 மார்ச் 6]

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, சந்தனப் பவுடருக்கு பெண்கள் மத்தியில் அதிகக் கிராக்கியிருக்கிறது. அதையாவது சீக்கிரம் ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இப்போதே அதனுடைய உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று கருதப்படுகிறது.

பேருந்து பயணக் கட்டணம்

*327. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் துறை பேருந்துகளுக்கும் நாட்டுடமையாக்கப்பட்ட அரசு பேருந்துகளுக்கும் பிரயாண கட்டண விகிதத்தில் உள்ள வேறுபாடுகளைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 22—6—1971 நாளுக்கு முன்பு, சாதாரணப் பேருந்தின் பயணக் கட்டணம் கிலோமீட்டர் ஒன்றுக்கு 3 காசுக்கு மேற்படாத வகையில் முடிவு செய்யப்பட்டிருந்தது. சில மாவட்டங்களில் உள்ள தனியார் பேருந்து உரிமையாளர்களும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறையினரும், கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2½ காசு வீதம் கட்டணம் வசூலித்து வந்தனர். கட்டண வீதங்கள் ஒரே மாதிரியாக இருப்பதற்காக, 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 43 (1) ( ) பிரிவின் கீழ், உள்துறையின் 22—6—1971 நாளிட்ட 1674-ஆம் எண் அரசு ஆணையில் பயணக் கட்டணம் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசு என்று இருக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசுக்கும் குறைவாகப் பயணக் கட்டணம் வசூலிக்க தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கிருந்த விருப்ப உரிமை எடுத்துவிடப்படவே, தனியார் பேருந்து உரிமையாளர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையினர் ஆகிய இருவரின் பேருந்துப் பயணக் கட்டணங்கள், 1—10—1971 நாளிலிருந்து கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசு என்ற ஒரே மாதிரியான வீதத்தில் இருக்குமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சில மாவட்டங்களில் நமது அரசுப் பேருந்துகளில் வசூலிக்கப்படும் கட்டண விகிதத்தைவிட அதிகமான அளவுக்கு தனியார்ப் பேருந்துகளில் வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அதை உடனடியாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சமீப அரசின் ஆணைப்படி தனியார்ப் பேருந்துகளும், அரசுப் பேருந்துகளும் ஒரே கட்டணத்தைத்தான் வசூலிக்கவேண்டுமென்று விதியிருக்கிறது. ஆகையால், குறிப்பிட்ட பேருந்து நிறுவனங்கள் ஏதாவது அதிகமான கட்டணத்தை வசூலித்தால் அதை அரசுக்குத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, தனியார்துறைப் பேருந்துகளை நடத்தக்கூடியவர்கள் 3 பைசாவுக்குக் குறைவாக வசூல் செய்யக்கூடாது என்று நாம் உத்தரவு பிறப்பித்திருக்கிறபடியால், அவர்கள் கட்டணம் வசூல் செய்வதற்காகக் கொடுக்கப்படும் ரசீது தொகை கூடிய தொகைக்கும், வசூல் செய்யும் தொகை குறைவாகவும் இருக்கிறது. இது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அந்தக் கட்டணத்திற்கும் குறைவாக அவர்கள் வசூல் செய்கிறேன் என்று சொல்கிறபோது, அரசாங்கம் 3 பைசா வசூல் செய்யவேண்டுமென்று சொல்வது பொதுமக்களுக்கு அதிகமான செலவை நாம் சுமத்துவது போல் இல்லையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, குறிப்பிட்ட புகார்கள் அந்த முறையிலே இருக்குமானல் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். ஏற்கெனவே இருந்த அரசு உத்தரவின்படி 3 பைசா வரை வசூல் செய்யலாம் என்று விதி வைத்து இருந்தாலும், அதிலே என்ன நிலைமை ஏற்பட்டது என்றால், சில தனியார் பேருந்துகள் அவர்கள் இஷ்டம் போன போக்கில் கட்டணத்தை வசூல் செய்ய ஆரம்பித்தார்கள். குறைவாக வசூல் செய்ய ஆரம்பித்தார்கள். அப்படி வசூல் செய்யக்கூடாது என்று அரசாங்கம் தெரிவித்திருந்தது. ஆனல் சேலத்திலுள்ள என். எஸ். மோட்டார் சர்வீஸ் என்பவர்கள் வேண்டுமென்றே குறைவாக வசூல் செய்த காரணத்தால் அது உயர்நீதி மன்றம் வரை சென்று உயர்நீதி மன்றத்தில், அதிக பட்சம் 3 பைசா என்று இருக்கிற காரணத்தால் அவர்கள்

1972 மார்ச் 6]

1 பைசா கூட வசூலிக்கலாம் என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்ட காரணத்தால், அந்தத் தொழிலில் ஒரு அன்ஹெல்தி காம்படிஷன் ஏற்பட்ட காரணத்தால், எல்லோரும் ஒரே மாதிரியாக 3 பைசா ஒரு கிலோமீட்டருக்கு வசூல் செய்யவேண்டுமென்ற விதி தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஒரு கிலோ மீட்டருக்கு 3 பைசா வசூலிப்பது என்று திருத்தியமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே போல் அகில இந்தியா விலும் எல்லா மாநிலங்களிலும் 3 பைசா வசூலிக்கப்படுகிறதா? அப்படியில்லையென்றால் வேறு மாநிலங்களில் வசூலிக்கப்படுகிற கட்டண விகிதங்கள் எப்படி உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வேறு மாநிலங்களில் வசூலிக்கப்படுகிற கட்டண விகிதங்களைப் பற்றிய குறிப்பு என்னிடம் தற்போது இல்லை. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் கட்டணம் குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இரண்டரை பைசா விகிதத்தில் கட்டணம் வசூலித்தபோதே தனி நபர்கள் லாபத்தில் ஓட்டிக் கொண்டு இருந்தார்கள். அரசாங்கம் தாங்களே கட்டணத்தை மூன்று பைசா என்று செய்து, தனி நபர்களையும் அதிகப்படுத்தச் செய்தார்கள். தனியார்கள் குறைந்த கட்டணத்தில் ஓட்ட முடியும் என்றால் ஏன் சர்க்காரால் அந்த வகையில் ஓட்ட முடியவில்லை என்பது புரியவில்லை. ஆகவே, எல்லாவற்றையும் 2½ பைசாவாகவே அமைக்க சர்க்கார் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : தலைவர் அவர்களே, தனியார்கள் எல்லோரும் 2½ பைசாவிலேயேதான் ஓட்டினார்கள் என்பது சரியில்லை. இந்த விதி வருவதற்கு முன்னாலேயே சிலர் மூன்று பைசா வசூலித்துக் கொண்டிருந்தார்கள். 2½ பைசா கட்டுபடியாகவில்லை என்றுதான் தனியார்களும் இந்த முறையைக் கையாண்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, மூன்று பைசா என்பது இந்தியாவிலேயே குறைவான கட்டணம் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பஸ்

முதலாளிகளுக்கு அதிக லாபம் வருகிறது என்கிற கருத்தினையும் சொல்லியிருக்கிறார்கள். அதனுல்தான் வரியும் உயர்த்தப் பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தனியார் பஸ்களில், எக்ஸ்ப்ரஸ் பஸ்ஸாக ஓடுபவை 3 பைசாவிற்கு மேல் வசூலிக்கிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: விரைவுப் பேருந்து களைப் பொருத்தவரையில், 50 சதவிகிதம் அதிகமாக வசூலிக்கலாம் என்று விதி போட்டிருக்கிறோம். அவர்கள் தரும் வசதிகளைப் பொருத்து, கட்டணத்தை உயர்த்த அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

அரசுப் போக்குவரத்துத் துறையிலுள்ள பழைய பேருந்துகள்.

*328 **வினு—திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துக்குச் சொந்தமான பழுதான பழைய பஸ்கள் ஏலம் மூலம் விற்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சமீப காலம் வரை, பழைய பஸ்கள், ஏலம் மூலம் விற்கப்பட்டன. கடைசி ஏலம் 22—9—1970 இல் விடப்பட்டது. அதன் பிறகு பழைய பஸ்கள் ஏலத்தில் விடப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழக அரசு பழைய பேருந்துகளை ஏலத்தில் விட செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தமிழக அரசு பழைய பேருந்துக்களை ஏலத்தில் விடுவதில்லை என்று முதல் அமைச்சரோடு நடத்திய கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஏலத்தில் விடப்பட்ட பஸ்ஸின் விலை என்ன என்பதை அறிவிப்பாரா?